நெடுந்தீவு பிரதேசசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்ரோபர் 30 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நெடுந்தீவு பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 104இ620 | | |
| விடுபட்ட தவறு | | | 01 | 712இ756 |
| குறைத்துக் கூறல் | 01 | 31இ250 | 01 | 712இ756 |

ii. சபையின் பயன்பாட்டிலுள்ள பத்து நன்கொடை வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக்கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் மோட்டார் வாகனங்களினதும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

#### கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 663இ828 பெறுமதியுடைய 06 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

----------------------

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு<br>1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | விபரம் |
|---|---|
| அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 160இ819 முற்பணம் செலுத்தத் தவறும்போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலங் கடந்த ரூபா 42,396 பெறுமதியான நானாவித வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை<br>எடுக்கப் பட்டிருக்கவில்லை.: |
| 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரிவு 152(ஏ) | உபசரணை செலவினம் ரூபா ஆயிரத்தினை விஞ்சும் பொழுது அமைச்சின் முன் அனுமதி பெறப்படவேண்டி இருந்தும் அனுமதியின்றி சபை நிதியில் இருந்து ரூபா 8இ840 செலுத்தப்பட்டுள்ளது. |
| நிதி ஒழுங்கு விதி 1646 | டுபு 8966 இலக்க பிக்கப் வாகனத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 94இ568 பெறுமதியுடைய 806.79 லீற்றர் டிசல் பயன்னடுத்தப்பட்டிருந்தும் வாகன ஓட்ட அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 107இ656 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 1இ324இ059 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 4இ465இ140 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 4இ298இ239 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ’000 | ’000 | ’000 |
| i.இறைகளும் வரிகளும் | 515 | 62 | 34 |
| ii.குத்தகை வாடகைகள் | 497 | 323 | 148 |
| iii.அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1இ924 | 1இ203 | - |
| iv.வேறு வருமானங்கள் | 8இ561 | 6இ043 | 393 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

குத்தகை நிலுவைஇ வாடகைஇ நீர்வரி மற்றும் உழவு இயந்திர கட்டணங்கள் ரூபா 574இ727 நிலுவையை அறவிடுவதற்கு சபையினால் எந்தவித ஆக்க பூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களிலிருந்து மீளாய்வாண்டு செப்ரெம்பர்- டிசம்பர் வரையான காலத்திற்குரிய நீதிமன்றத்

தண்டப்பணங்களும் பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.3.4 முத்திரை கட்டணம்

-------------------------

i நடைமுறையாண்டுக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களுக்கான பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

ii மீளாய்வாண்டிற்கு முன்னைய இரு ஆண்டுகளுக்கான முத்திரைத் தீர்வை கட்டணம் ரூபா 378,700 காணிப்பதிவாளர் நாயகத்திடம் பெறப்பட்டிருந்தும் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3.5 தவறான கொடுப்பனவு

------------------------------------

சபை தலைவர் உள்;ராட்சி தேசிய மாநாட்டுக்கு கொழும்பு சென்றமைக்காக செலுத்திய டீசல் கொடுப்பனவு ரூபா 12,252 இற்கான வாடகை வாகன விபரம் வாகன ஓட்டிய தூரம், மற்றும் டீசல் அடித்த பற்றுச்சிட்டை வாகன இலக்கம் என்பவை குறிப்பிடப்படாமையால் தவறான கொடுப்பனவாக அவதானிக்கப் பட்டுள்ளது.

2.3.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

------------------------------------------------------

மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

--------------------------------------------------------------------------

கணிப்பீட்டுச்சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களின் பெறுமதி ரூபா 33இ648இ386 ஆகக் காணப்படுகிறது.

2.3.7 (1)மீளாய்வாண்டிலிருந்து இரண்டு சபை வாகனங்கள் பயன்பாடின்றி இற்றைவரை காணப்படுகின்றது.

(ஐஐ)மானி வாசிப்பு பழுதடைந்த நிலையில் இரண்டு வாகனங்கள் காணப்படுவதினால் கிலோ மீற்றருக்கான எரிபொருள் பயன்பாட்டினை அறியமுடியாதுள்ளது.

2.4 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

. செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

----------------------------------------------------------------------------------------

2010 மற்றும் 2011 ம் ஆண்டுகளில சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2இ059இ122 பெறுமதியான 06 வேலைத்திட்டங்கள் நடைமுறையாண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தப்படாமையால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் பெறப்பட முடியாதுள்ளது.

முற்றாகக் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டம்

-------------------------------------------------------------------------

வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 5இ750இ000 பெறுமதியான 05 வேலைத்திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

3. முறைமைகளில் கட்டுப்பாடுகளில் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

ை. வருமான சேகரிப்பு
ைை. நிலையான சொத்துக்கள்
ைைை. சில்லறைக் கடனாளிகள்
ைஎ. நானாவித வைப்புக்கள்
எ. முற்பணம்